# <u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

OS. No. 73/2019 Date: 13.02.2024

PW1- நடேசன்

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் விவசாயம் செய்கிறேன். பிரதிவாதியின் மாமியாரின் அப்பா வீடு என் பக்கத்து வீடு என்பதால் எனக்கு பழக்கம். இந்த விவரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை. பிரதிவாதி என்னிடம் 21.08.2016 அன்று கடன் கேட்டார். அன்றைய தினமே கடன் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அதற்கு முன்பே அவர் என்னிடம் சொல்லி இருந்ததால் நான் தயாராக வைத்திருந்தேன். ஏற்கனவே கேட்ட விவரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் ரூ.500/- பழைய நோட்டுகளாக கொடுத்தேன். நான் இந்த வழக்கு இல்லாமல் பிரதிவாதியின் மாமியார் பெயரில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதுவும் கடனுறுதி சீட்டின் பேரில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தான். அந்த கடன் தேதி நினைவு இல்லை. அந்த வழக்கு OS.No.75/2019 என்றால் எனக்கு நினைவு இல்லை. நான் வருமான வரி செலுத்துவதில்லை. எனக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது. அது என் அப்பா பெயரில் உள்ளது. அந்த நிலம் சம்பந்தமாக எனக்கும் என் தம்பிக்கும் இடையே வழக்கு நடந்து வருகிறது. தாவா புரோநோட்டை பிரதிவாதி தான் எழுதி கொடுத்தார் என சொல்லியுள்ளது உண்மை தான். கடன் கொடுத்த கிழமை நினைவு இல்லை. அப்போது நேரம் மதியம் 12.00 அல்லது 1.00 மணி இருக்கும். நான் வழக்குரையில் சொல்லியுள்ள வட்டி கணக்கீடு தவறாக கூட இருக்கலாம். தாவா கடன் தேதியில் பிரதிவாதி இந்தியாவில் இல்லை என்றாலும் அவர் வெளிநாட்டில் தான் இருந்தார் என்றாலும் சரியல்ல. 10.08.2016 தேதி முதல் 10.08.2018 வரை பிரதிவாதி துபாயில் இருந்தார் என்றாலும் அதற்கான கடவு சீட்டு உள்ளது என்றாலும் சரியல்ல. அவர் கனாடா செல்வதாக தான் சொன்னார். அதற்கு முன்பும் கனாடாவில் இருந்துவிட்டு வந்ததாகவும் சொல்லியிருந்தார். பின்பு எந்த தேதியில் வெளிநாடு சென்றார் என்று எனக்கு தெரியாது. நான் ஏல சீட்டு தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2008ல் ஆரம்பித்த ஏல சீட்டில் பிரதிவாதியும், அவரது மாமியார் மற்றும் மலர்கொடி, கோபிநாத் ஆகியோரும் சேர்ந்திருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் ஏல சீட்டு, கந்து வட்டி தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி திருச்செங்கோட்டில் வசதியாக உள்ளார் என்றால் சரிதான். அவர் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் அவரிடம் இருந்து பணம் பிடுங்க நினைத்து இத்தாவாவை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. அதே நோக்கத்தில் தான் பிரதிவாதியின் மாமியார் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-நடேசன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.